செ.வெ.எண்: 45 நாள்: 23.02.2021

கரூர் மாவட்டம்

**இந்திய அரசு நேரு யுவ கேந்திராவில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் பகுதி நேர பணியில் சேர ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் - கரூர் மாவட்ட இளையோர் ஒருங்கிணைப்பாளர் திரு.பிரிஜேஸ் கௌசிக் அவர்கள் தகவல்**

இந்திய அரசு இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் சார்பில் நேரு யுவ கேந்திராவில் பகுதி நேரமாக பணியாற்ற ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கலாம் என கரூர் மாவட்ட இளையோர் ஒருங்கிணைப்பாளர் திரு. பிரிஜேஸ் கௌசிக் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயது முதல் 29 வயது வரை உள்ள இளைஞர்கள் மற்றும் பெண்கள் இந்த அரிய வாய்ப்பை பெற்று பயனடையலாம். இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணியின் பெயர் : தேசிய இளைஞர் படைத் தொண்டர் பணியின் காலம் 2 ஆண்டுகள் மட்டும். மாதாந்திர ஊக்கத்தொகை ரூ. 5,000/- அவரவர் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.

தகுதி : 10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கரூர் மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட ஒன்றியங்களில் வசிக்க வேண்டும். டிகிரி மற்றும் கணினித் திறமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சமுதாய நலனில் அக்கறை உள்ளவர்களாகவும், இரண்டு ஆண்டுகள் சமூக மேம்பாட்டு பணிகளால் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

பணியின் தன்மை : சமுதாய மேம்பாட்டு பணிகளான கல்வி / சுகாதாரம் / சுற்றுச்சூழல்/ இளைஞர்/ பெண்கள் மேம்பாட்டு போன்றவைகளை சம்பந்தப்பட்ட ஒன்றியங்களில் அரசின் பல்வேறு திட்டங்களுடன் இணைந்து இளைஞர் / மகளிர் நற்பணி மன்றங்களை உருவாக்கி செயல்படுத்த வேண்டும் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த பணி நிரந்தர அரசுப் பணி அல்ல என்பதை குறிப்பிடத்தக்கது.

தகுதி உள்ளோர் கீழ்க்கண்ட முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ, நேரிலோ, தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். **கடைசி தேதி 25.02.2021 மாலை 05:00 மணி வரை.** மேலும் விபரங்களுக்கு மின்னஞ்சல் முகவரி.www.nyks.nic.in அல்லது www.yas.nic.in அலுவலக முகவரி : No.148/2 நவலடியான் இல்லம், மில்கேட் அருகில் தாந்தோன்றிமலை அஞ்சல், கரூர் மாவட்டம் - 639 005. அலைபேசி 04324 256729, கைபேசி 9442523710 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம் என நேரு யுவ கேந்திரா, மாவட்ட இளையோர் ஒருங்கிணைப்பாளர், திரு. பிரிஜேஸ் கௌசிக் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**